# கள்ளக்குறிச்சி நகராட்சி

2021ம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை.. திரு என்.குமரன், B.Sc.,
தனி அலுவலர் / ஆணையாளர்

## பொருள் எண் – 01

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகன எண் TN 15 P 3133 என்ற வாகனத்திற்கு தகுதி சான்று 19.06.2021 அன்றுடன் முடிவடைவதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய உள்ளூர் /வெளியூர் அரசு அங்கீகாரம் பெற்ற அரசு / தனியார் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரி பழுதுநீக்கம் செய்து, கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று தகுதி சான்று பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1200/2021/எச்1

## பொருள் எண் – 02

மாவட்ட ஆட்சித் தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் நேரடி அறிவுரையில் தற்போது கொரோனா வைரஸ் நகராட்சி பகுதியில் அதி தீவிரமாக பரவி வருவதால், நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் தீவிரமாக பரவி வருவதை கட்டுப்படுத்த கிருமி நாசினிகள் தெளிக்கும் பணியாளர்கள் இந்நகராட்சியில் போதிய அளவு பணியாளர்கள் இல்லை என்பதால் தேவைகேற்ப தற்காலிக பணியாளர்களை நியமித்து பாதுகாப்புடன் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்தார். அதனடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் கிருமி நாசினிகள் தெளிக்கும் பணிக்கு 20 நபர்களை தற்காலிகமாக தனியார் ஆட்கொடுப்பு மற்றும் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலமாக தேர்ந்தெடுத்து பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவு கோப்பு எண்.733/2020/27/எச்1 ல் கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு கடந்த 10.05.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளM/s. ராசி மகளிர் சுய உதவி குழு கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மேற்கண்ட பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி மே–2021 ம் மாதத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் பிரிவு 15 ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் மேற்கண்ட பணிக்கு ஜீன் 2021 முதல் ஆகஸ்ட் 2021 வரைஆகிய 3 மாதங்களுக்கு தொடர்ந்து M/s. ராசி மகளிர் சுயஉதவி குழு கள்ளக்குறிச்சி என்ற குழுவின் மூலமாகவே பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான பணி உத்தரவு வழங்கிடவும் மேற்படி கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு பணியாளர்களை தொடர்ந்து 3 மாதங்களுக்கு பணியில் அமர்த்தி பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு ஏற்கனவேபணிபுரியும் ராசிமகளிர் சுயஉதவி குழு மூலமாகவே ஜீன் 2021 முதல் ஆகஸ்ட் 2021 ஆகிய 3 மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 733 / 2020 /29/எச்1)

## பொருள் எண் –03

**கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகன எண் TN15P3121 என்ற வாகனத்திற்கு தகுதி சான்று 19.06.2021 அன்றுடன் முடிவடைவதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய உள்ளூர் / வெளியூர் அரசு அங்கீகாரம் பெற்ற அரசு / தனியார் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரி பழுது நீக்கம் செய்து. கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று தகுதி சான்று பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 1196/2021/எச்1

## பொருள் எண் 04

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் திருச்சிராப்பள்ளிஅவர்களின் செயல் முறை ஆணை எண். JCEE-M/TRZ/TNPCB/F.0447CUD.BWA/RS/CUD/2021 நாள்:**07.04.2021** என்ற உத்தரவில் கொரோனா தொற்று தொடர்பாக உருவாகும் மருத்துவ கழிவுகளை சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டத்தின் மருத்துவ கழிவுகள் மேலாண்மை **2016**னபடி வெளியேற்றுவது குறித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொடர்பாக உருவாகும் முகஉறை, கைஉறை, முழு உடற் கவசம் ஆகியவற்றை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்த M/s.Pondicherry Solid waste Management Company Private Limited, T,Pudaiyur என்ற நிறுவனத்திற்கு மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் திருச்சிராப்பள்ளி அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களால் பயன்படுத்தப்பட்ட முக உறை, கை உறை, முழு உடற் கவசம் (PPE) ஆகியவற்றை தினசரி சேகரம் செய்து பாதுகாப்பான முறையில் M/s.Pondicherry Solid waste Management Company Private Limited, T.Pudaiyur அப்புறப்படுத்த ஒரு கிலோவிற்கு ரூ.**52.00** வீதம் மேற்கொள்ள மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**2.00** லட்சத்திற்கு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்

**2.**பணியின் அவசரஅவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் M/s.PondicherrySolidwaste Management Company Private Limited, T.Pudaiyur என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1012/ 2021 /எச்1)**

## பொருள் எண் –05

மாவட்ட ஆட்சித் தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் நேரடி அறிவுரைகளுக்கிணங்க கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான **5** பொது இடங்களில் மைக்செட் மூலம் கொரோனா வைரஸ் நோய் தொற்று குறித்த விழிப்புணர்வு பொது மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** ன் பிரிவு **15** ன் கீழ், பணி மேற்கொண்டமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகைரூ. **87000/-**யை (ரூபாய் என்பத்திஏழாயிரம் மட்டும்) திரு.மு.சரவணன் கள்ளக்குறிச்சி என்பவருக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**1.**பதிவு செய்யலாம்

**2.**பணியின் அவசரஅவசியம் கருதி, தனி அலுவரின் முன்னனுமதி பெற்று திரு.மு.சரவணன் கள்ளக்குறிச்சி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**3.**பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 733/ 2020/24 /எச்1)**

## பொருள் எண் –06

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய் நிதி 2020–2021இன்கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 25.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தனை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | துருகம் சாலை எரிவாயு தகன மேடையினை பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்தல் | 8,50,000 | M/s MHT Engineering, Chennai | ரூ.7,49,17/– 0.03% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| 2 | | | M/s Yes Yes Gee Engineering, Chennai | ரூ.7,67,575/– 2.42% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s MHT Engineering, Chennai என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 51/2021/இ1

## பொருள் எண் –07

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2021–2022ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 18.05.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தெருமின் விளக்குகள் கொள்முதல் செய்தல் | ரூ. 3,60,000 | M/s. சக்தி பர்னிச்சர்ஸ் & எலக்ட்ரிக்கல்ஸ் என்டர்பிரைசஸ், சேலம் | ரூ. 2,93,376/– 0.07% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | M/s. முருகா பர்னிச்சர்ஸ் & எலக்ட்ரிக்கல்ஸ், தியாகதுருகம் | ரூ. 2,93,168/– 0.01% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. திருமுருகன் பர்னிச்சர்ஸ் & எலக்ட்ரிக்கல்ஸ் என்டர்பிரைசஸ், தியாக துருகம் | ரூ. 2,93,280/– 0.03% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில் 0.01% மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. முருகா பர்னிச்சர்ஸ் & எலக்ட்ரிக்கல்ஸ், தியாகதுருகம் என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 003 / 2021 / இ1)

## பொருள் எண் –08

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2021–2022ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 18.05.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் அலுமினிய தடுப்புகள் ஏற்படுத்துதல் | ரூ. 9,00,000 | M/s. சக்தி பர்னிச்சர்ஸ் & எலக்ட்ரிக்கல்ஸ் என்டர்பிரைசஸ், சேலம் | ரூ. 7,58,585/– 1.15% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | M/s. முருகா பர்னிச்சர்ஸ் & எலக்ட்ரிக்கல்ஸ், தியாகதுருகம் | ரூ. 7,49,365/– 0.08% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. திருமுருகன் பர்னிச்சர்ஸ் & எலக்ட்ரிக்கல்ஸ் என்டர்பிரைசஸ், தியாக துருகம் | ரூ. 7,62,740/– 1.70% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>**அலுவலக குறிப்பு:–**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில் 0.08% மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. முருகா பர்னிச்சர்ஸ் & எலக்ட்ரிக்கல்ஸ், தியாகதுருகம் என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2889 / 2021 / இ1)

## பொருள் எண் – 09

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக மின் இணைப்புகள் (ஒரு முனை / மும்முனை) பெறுவதற்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சியின் மூலம் விண்ணப்ப படிவங்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் நிலையில், வரப்பெறும் கேட்பு பட்டியலினை உடனுக்குடன் செலுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, இந்நகராட்சி மூலம் சமர்ப்பிக்கப்படும் மின் இணைப்பு விண்ணப்ப படிவங்களுக்கு, புதிய மின் இணைப்புகள் பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ. 2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1426 / 2021 / இ1)

## பொருள் எண்– 10

நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் தேவையான ரெடிமிக்ஸ் மருந்து சப்ளை செய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் 25.02.2021 அன்று கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ரெடிமிக்ஸ் மருந்து ஒரு லிட்டர் தொகை ரூ. | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | M/s Shivam Traders, Mogappair, Chennai | 800.00 | குறைவு |
| 2 | M/s Thirumurugan Traders, Namakkal | 850.00 | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s Shivam Traders, Mogappair, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 178/2021 /எச்1 )

## பொருள் எண்– 11

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தில், திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–2019ன் கீழ், ரூ. 175.00 இலட்சம் மதிப்பீட்டில், உயிரிய செயலாக்கம் முறையில் (Bio Mining) துருகம் சாலையில் உள்ள குப்பை சேகரிக்கும் கிடங்கில் உள்ள குப்பைகளை பிரித்தெடுத்து இடத்தினை மீளப் பெறப்படும் பணிக்கு, மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக மாநில அளவில் **மக்கள் குரல்** மற்றும் **ட்ரினிட்டி மிரர்** நாளிதழ்களில் 05.02.2021 ஆம் தேதியன்று பிரசுரம் செய்யப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ. 72,192/– (ரூபாய் எழுபத்தி இரண்டாயிரத்து நூற்று தொண்ணூற்று இரண்டு மட்டும்)–ஐ வழங்க கோரி M/s. கிராபிக்ஸ் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தாரிடமிருந்து பட்டியல் எண். 4554, நாள். 05.02.2021ல் பட்டியல் பெறப்பட்டுள்து. மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2220 / 2018 / இ1)**

## பொருள் எண்–12

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சிறப்பு சாலை திட்டம் 2020–2021ன் கீழ், ரூ. 200.00 இலட்சம் மதிப்பீட்டில், கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01, 02, 10, 13 & 21 பகுதிகளில் தார்சாலைகள் அமைக்கும் பணிக்கு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக மாநில அளவில் **மக்கள் குரல்** மற்றும் **நியு இந்தியன் எக்ஸ்ப்ரஸ்** நாளிதழ்களில் 24.12.2020 ஆம் தேதியன்று பிரசுரம் செய்யப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ. 88,234/– (ரூபாய் என்பத்தி எட்டாயிரத்தி இருநூற்று முப்பத்தி நான்கு மட்டும்)–ஐ வழங்க கோரி M/s. கிராபிக்ஸ் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தாரிடமிருந்து பட்டியல் எண். 4425, நாள். 24.12.2020ல் பட்டியல் பெறப்பட்டுள்து. மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2898 / 2020 / இ1)**

## பொருள் எண் –13

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2020–2021ஆம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ | ஒப்பந்ததாரர் பெயர் (திரு / திருமதி) | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | சங்கராபுரம் ரோடு கோட்டைமேடு கோரிமாபீ வீடு அருகில் மினி டேங்க் அமைத்தல் | 200000 | ஜே.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 0.39% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | ஏ.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 1.87% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2 | 15வது வார்டு ஏமப்பேர் விஜயலட்சுமி நகர் பகுதியில் மினி டேங்க் அமைத்தல் | 250000 | என்.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.33% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | எ.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 2.40% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3 | 15வது வார்டு கரியப்பா நகர் பகுதியில் மினி டேங்க் அமைத்தல் | 250000 | என்.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.33% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | ஏ.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 2.40% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4 | 20வது வார்டு உலகப்ப செட்டிக் கொல்லைதெரு கிருஷ்ணர் கோயில் அருகில் மினி டேங்க் அமைத்தல் | 300000 | எஸ்.பத்மா, கள்ளக்குறிச்சி | 0.38% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | என்.கணேசன், கள்ளக்குறிச்சி | 1.55% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 400/2021/இ1

## பொருள் எண் –14

கள்ளக்குறிச்சி நகராட்சி 15.87 ச.கி.மீ. பரப்பளவில் சுமார் 103.640 கி.மீ. நகராட்சி சாலைகள் மற்றும் பிற துறைகளுக்கு சொந்தமான சாலைகளை உள்ளடக்கியது. இச்சாலைகளில் மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டு நகரின் முக்கிய தேவையாக மழைநீர் மற்றும் கழிவுநீர் (Sullage) செல்ல ஏதுவாக இவ்வடிகால்கள் உள்ளது.

இந்நகராட்சி பகுதிகளில் சுமார் 78.380 கி.மீ. நீளத்திற்கு வடிகால்கள் மற்றும் பிற துறைகளுக்குச் சொந்தமான சாலைகளில் சுமார் 11.00 கி.மீ. நீளத்திற்கும் மற்றும் பொதுப்பணித் துறையின் கால்வாய் சுமார் 4.00 கி.மீ. நீளத்திற்கும் உள்ளது. இவை அனைத்திலும் நகரின் பொதுமக்கள் பயன்படுத்தும் Sullage / Gray Water செல்லும் வகையில் உள்ளதாலும், இக்கால்வாயில் ஏற்படும் அமைப்புகளால் நகரின் பொதுமக்கள் சிரமத்தினை தடுத்திடவும், இக்கால்வாய்கள் அனைத்தும் நகராட்சியினால் தூய்மை படுத்தப்பட்டும் (Desilting) இதில் சேரும் மண் அகற்றப்பட்டும் வருவதும் அவசியமான பணியாகும்.

மேற்படி பணியில் தற்சமயம் ஆட்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதால் காலதாமதம் மற்றும் பிற பணிகளும் பாதிப்பு ஏற்படுகிறது. இதனை தவிர்க்கவும், இச்சிறிய கால்வாய்களில் பெரிய அளவிலான மும்முனை பளுதூக்கி (JCB) இயந்திரத்தின் மூலம் தூர்வார இயலாத நிலையில், சிறய ரக 3D Excavator மூலம் சிறு சிறு தெருக்கள், மார்கெட், சிறிய அளவில் வடிகாலின் வாய்ப்பகுதி அமைந்துள்ள இடங்கள் மற்றும் நெரிசலான இடங்களில் உள்ள பணிகளை மேற்கொள்ளும் வகையில் உள்ள இயந்திரம் வாங்குவதற்கு ஆகும் தோராய மதிப்பீடு தொகை ரூ. 5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

## பொருள் எண் 15

கள்ளக்குறிச்சி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், பேருந்து நிலையம், தினசரி மார்கெட், அம்மா உணவகம், சமுதாய கழிவறைகள், மற்றும் நுண் உரக்களம், ஆகிய இடங்களில் துர்நாற்றம் வீசப்படும் இடத்தில் லெமன் கிராஸ் ஆயில் வாசனை திரவியம் தெளித்து பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படா வண்ணம் தடுக்கவும், பொதுமக்களின் நலன் கருதியும் மேற்கண்ட லெமன் கிராஸ் ஆயில் வாங்கி பயன்படுத்தி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.**9.90** லட்சத்திற்கு மன்றப் பொருள் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1110 /2021/எச்1)**

## பொருள் எண் 16

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2020–2022ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 26.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | துருகம் சாலை மயானத்தின் வடக்கு புறம் சுற்று சுவர் மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் | ரூ. 9,80,000 | திரு. N.கணேசன், கள்ளக்குறிச்சி | 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. A.S. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.42% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | துருகம் சாலை மயானத்தின் நடுப்பகுதியில் சுற்று சுவர் மற்றும் சிமெண்ட் தளம் அமைத்தல் | ரூ. 9,80,000 | திரு. N.கணேசன், கள்ளக்குறிச்சி | 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. A.S. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.42% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | வ.உ.சி. நகர் 6–வது பிரதான சாலை சிமெண்ட் தளம் அமைத்தல் | ரூ. 4,00,000 | திரு. N.கணேசன், கள்ளக்குறிச்சி | 0.15% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. A.S. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.45% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். / 2021 / இ1)

## பொருள் எண் 17

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தற்போது பயன்பாட்டில் உள்ள 12க்கும் மேற்பட்ட கணினிகள், பிரிண்டர்கள் ஆகியவற்றினை ஆண்டுதோறும் பராமரிக்க வேண்டியுள்ளது. அதனடிப்படையில் 2021–2022ஆம் ஆண்டுக்கு பராமரிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் பி1/ /2021

**தனி அலுவலர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**